இன்று
என்றும்
நன்று

6 எனது ஆறாம் வகுப்பு

நீங்கள் படித்த பள்ளி,
உங்கள் ஆசிரியர்,
உங்கள் நண்பர் பற்றி
கட்டுரை எழுதுங்கள்
14.08.2026 க்குள் அனுப்பவும்

இன்று மின்னிதழ்


www.indhru.in



சு.அருண் பிரகாஷ்
சிறப்பிதழ்

2026
ஆகஸ்ட்
1–15

இன்று மின்னிதழ் இலவச மாதமிருமுறை



சு.அருண்பிரகாஷ்
சிறப்பிதழ்

இன்று ஆசிரியரிடமிருந்து



அனைவருக்கும் வணக்கம். என் வீட்டுத்தோட்டம் சிறப்பிதழுக்கு ஏகப்பட்ட பாராட்டுக்கள். இது ஒரு வித்யாசமான தலைப்பு என்று அனைவரும் பாராட்டினார்கள். சிலர் அதிக அளவில் வீட்டுத்தோட்டத்தின் புகைப்படங்களை அனுப்பியிருந்தார்கள். அனைத்தையும் வெளியிடமுடியவில்லை.

அடுத்த 16.08.2026 ஆகஸ்ட் இதழ் **எனது ஆறாம் வகுப்பு வாழ்க்கை** என்ற தலைப்பில் கட்டுரை அனுப்புங்கள். சுருக்கமாக இருக்கட்டும். உங்கள் பள்ளி பெயர், பிடித்த ஆசிரியர், பிடித்த உடன் படித்த ஒருவர் பற்றி அனுபவத்தை எழுதுங்கள்.

வாசகர்கள் யாரேனும் ஓவியம், கார்ட்டூன் வரைபவர் இருந்தால் உங்கள் விபரங்களை அனுப்பிவையுங்கள்.

அனைவரும் சேர்ந்து பல சாதனைகள் படைக்கலாம்.

வாழ்த்துக்கள். எழுதுங்கள்...


எல்லா நாளும்...

அனைவருக்கும் நன்றி...

திரு.சு.அருண் பிரகாஷ்

இதழ் சிறப்பாசிரியர்

ஆசிரியர் வெ.கோபிநாத்,
Whatsapp : 7094053241
e.mail– indhrumail@gmail.com
Web Site : www.indhru.in



மினி கதை

பேய்





ஆசிரியர் மலர்மதி

திகில் படம் ஒன்றில் பேயாக நடித்துவிட்டு தன் பைக்கில் வீடு திரும்பிக் கொண்டிருந்தான் திருமலை.

இரவு மணி இரண்டு.

புளியமரத்தடியில் ஓர் உருவம் நின்றிருக்க பயத்தில் தெப்பமாய் நனைந்து வந்த வழியே திரும்பிவிட்டான்.

நம்முடைய இயலாமைக்கு கடிகாரம் பழி சுமக்கிறது நேரம் சரி இல்லை...



நடேஷ் கன்னா
கல்லிடைக்குறிச்சி.
627416



என்னுரை...



மூன்றாம் வகுப்பு பாடநூலில் இடம்பெற்றிருந்த, பாரதியாரின் பாப்பா பாடல்களிலிருந்து தொடங்கியது என் இலக்கிய ஆர்வம். எட்டாம் வகுப்பு படிக்கும்போது, நோட்டு போட்டு 20க்கும் மேற்பட்ட சிறுவர் கதைகளை மிகுந்த ஆசையுடன், ரசித்து ரசித்து எழுதி, சில ஆண்டுகளாகப் பத்திரப்படுத்தி வைத்திருந்தேன். அப்போதிருந்த அந்த ஈடுபாடும் அர்ப்பணிப்பும் இன்றளவும் எனக்கிருப்பதாக நான் உணரவில்லை. ஆனால் அவற்றை அப்போது, எந்தப் பத்திரிகைக்கும் அனுப்ப முயற்சிக்கவில்லை. அனுப்பியிருந்தால் பிரசுரமாகியிருக்குமா என்பது வேறு கேள்வி! பின்பு, பள்ளிப்படிப்பு முடித்து வகுப்புத் தோழர்களிடமிருந்து விடைபெறுகையில், ஆட்டோகிராப், முகவரியுடன் அனேகரும் ஏதாவது கவிதை எழுதிக் கொடுக்கையில், எதுவுமே எழுத வராமல் தடுமாறி ஏதோவொன்றை எழுதிக் கொடுத்தேன்!

அதுவே, கவிதை எழுதிப் பழக வேண்டும் என்ற உந்துதலை எனக்குள் உண்டாக்கிற்று!

அதன்பின், கல்லூரி நாட்களில் பாடவேளைகளில், பாடத்தைக் கவனிக்காமல் நோட்டுக்களில் கவிதை எழுதிக்கொண்டிருந்த கதை எனக்கும் உண்டு! சக மாணவர்கள் அதைக் கவனித்துவிட்டுப் பாராட்டவே, கவிதை எழுதும் பழக்கம் தொடர்ந்தது! என்ன ஒன்று... பட்டப் படிப்புதான் பாதியிலேயே அறுந்துவிட்டது!

கல்லூரியைக் கட் அடித்துவிட்டு, தூத்துக்குடி ராஜாஜி பூங்கா அருகிலிருந்த பழைய புத்தகக் கடையில் ராணிமுத்து போன்ற நாவல்களை வாங்கிச்சென்று படிப்பேன். அதேபோல், நூலகத்திற்குச் சென்று நாவல்கள், கவிதைகள், தினசரிகள், வார இதழ்கள் போன்றவற்றையும் வாசிப்பது வழக்கமாக இருந்தது. பிற்பாடு நூலக உறுப்பினராகி வீட்டுக்கு எடுத்துச் சென்றும் வாசித்ததுண்டு.

அந்நாட்களில் நான் அதிகம் வாசித்த நூல்கள் என்றால் அவை, தமிழுக்கான முதல் ஞானபீட விருது பெற்ற அகிலனின் நாவல்கள் மற்றும் சிறுகதைகள்தான்!

"கன்னத்தில் முத்தமிட்ட

மழைத்துளியே...

ஏன் உனக்கிந்த கஞ்சத்தனம்..?

என் உடல் முழுதும்

எச்சிலாக்கு!

உலக மக்கள் பஞ்சம் போக்கு!"

– இதுதான் நான் எழுதிப் பழகிய முதல் கவிதை!

பின்னொரு நாளில், இப்படியாக ஒரு கவிதை எழுதியிருந்தேன்:

சின்னஞ்சிறு வெண்ணிலவே!

சிங்காரப் பொன்னிலவே!

ஆம்ஸ்ட்ராங்கின் அடைக்கலமே!

ஆதிசிவன் பிறைநிலவே!

சூரியன் உனைத்துரத்த

ஓடுவதேன் வெண்ணிலவே!

விண்மீன் படை துணை இருக்கு;

வீறுகொண்டு வா நிலவே!

இதை ஒருநாள் எதேச்சையாய்க் கண்ணுற்ற என் உறவினரும் கவிஞருமான ஆதிசுப்பு என்பவர்தான், குடும்ப மலர், ராணி ஆகியவற்றின் முகவரிகள் தந்து அவற்றுக்கு எழுதும்படி எனக்கு ஆலோசனையும் ஊக்கமும் தந்தார்!

இலக்கியத்தில் அவர்தான் எனக்குக் குருநாதர்!

நானும் தினத்தந்தி – குடும்ப மலருக்கு எழுதியனுப்ப ஆரம்பித்தேன். ஒவ்வொரு வாரமும் மனதில் ஏக்கம் நிறைய, கண்களில் எதிர்பார்ப்பு விரிய, குடும்ப மலரில் என் கவிதை இடம் பெற்றிருக்கிறதா என ஏக்கத்தோடும் எதிர்பார்ப்போடும் தேடுவேன். கிட்டத்தட்ட, ஓராண்டுக்கு மேலான தொடர் முயற்சியின் பின்தான், என் முதல் கவிதை 2007 இல் குடும்பமலரில் அச்சானது!

எங்கள் தோட்டத்துப் பம்பு செட்டில் குளித்துக் கொண்டிருந்தேன். என் எதிர் வீட்டுச் சிறுவன் சங்கர் ஓடோடி வந்து, மாமா..! உனக்கு மணியார்டர் வந்திருக்கு; சீக்கிரம் வா... போஸ்ட்மேன் வெயிட் பண்றார் என்றான். 'யாரிடமிருந்து?' என்ற கேள்விக்கு அவனிடம் பதிலில்லை. 'எவ்வளவு' என்ற கேள்விக்கு 20000 ரூபாய் என்றான். யாராக இருக்கும் என்ற கேள்வியுடன், பரபரப்பும் மகிழ்ச்சியும் தொற்றிக்கொள்ள, குளித்தும் குளிக்காமலும் அங்கிருந்து வீட்டுக்கு ஓடினேன். போஸ்ட்மேன் மணியார்டர் படிவத்தை நீட்டிக் கையெழுத்து போடச் சொன்னார். போட்டேன். 20 ரூபாயைக் கையில் கொடுத்துவிட்டு, தினத்தந்தியில் உங்கள் கவிதை வந்திருக்கிறது; அதற்கான சன்மானம் இது எனக் கூறிவிட்டுக் கிளம்பிவிட்டார். பின்னர்தான், இருபதை இருபதாயிரம் என, என் மருமகன் விளையாடியிருப்பது புரிந்தது.

ஆனால், எழுத்தாளனுக்குப் பணம் ஒரு விஷயமா என்ன! என்ன கவிதையோ, எப்போது வந்ததோ என்று, திருவிளையாடல் தருமி, நாகேஷ் அளவுக்கு உள்ளும் புறமும் பிதற்றித் திரிந்தேன். நான் அனுப்பி வைத்திருந்த கவிதைகளையெல்லாம் எடுத்து வைத்துக்கொண்டு, இதுவாக இருக்குமோ, அதுவாக இருக்குமோ என்று எடைபோட்டுக் கொண்டிருந்தேன். அண்டை, அயலார் வீடுகளில் எல்லாம் தயங்கித் தயங்கிக் கேட்டு, கடைசியில் ஒருவழியாக, எனக்கு டியூஷன் சொல்லித் தந்த அக்கா ஆவுடையம்மாள் அவர்கள் வீட்டில், தேடிக் கண்டடைந்தேன் என் திரவியத்தை!

அது இது:

என் சடலத்தைப் பார்த்தும்கூட

அழுதுவிடாதே... சட்டென்று எழுந்துவிடும்

உன்னை ஆறுதல்படுத்த!

கவிதைகளில் நான் அதிகம் வாசித்தவை, கவிப்பேரரசு வைரமுத்துவின் நூல்களே! காதல் கவிஞர் தபூ சங்கரின் மீதும்



எனக்குக் கொள்ளைப் பிரியம்! 'திமிருக்கும் அழகென்று பெயர்' என்ற அவரது கவிதை நூல் என் உறவினரின் ஒருவர் வீட்டில் என் கண்ணில் பட, அன்றிலிருந்து அவரது விசிறியாய் மாறியதுடன், அவரைப் போலவே நிறைய காதல் கவிதைகள் எழுத வேண்டும் என்ற தாகமும் எனக்குள் அதிகரித்தது! ஆனால் முடிந்தவரை, அது அவரது மொழிநடையிலேயே அமைந்துவிடாதபடி சற்று எனும் மாறுபட்ட பாணியில் எழுத முயல்கிறேன்!

அதைத்தொடர்ந்து, விகடன் வாசிப்பின் மூலம், ஜோக்ஸ் எழுதுவதிலும் நாட்டம் பிறந்தது. அதிலும் கிட்டத்தட்ட ஓராண்டு முயற்சிக்குப் பின்தான் வெற்றி கண்டேன். 2009 இல் என் முதல் ஜோக் ஆனந்த விகடனில் வெளியாகியது. தபால் அலுவலகத்திற்கு நேரில் சென்று, மணியார்டர் பணம் 100 ரூபாயை வாங்கிக் கொண்டு சைக்கிளில் வீடு திரும்பும்போது, ஏதோ சாதனை செய்துவிட்டதைப் போல ஆனந்தக் கூத்தாடினேன். அதைத் தொடர்ந்து வேறு சில இதழ்களுக்கும் ஜோக்ஸ் எழுதியிருக்கிறேன். இதழ்களில் படைப்பு வரும்போதெல்லாம், இல்லம் தேடி அந்த இதழ்களை போஸ்ட்மேன் கொண்டு வருவதும் கையெழுத்திட்டு அதை வாங்கிக் கொள்வதும், கர்வமும் இன்பமும் கலந்த அலாதி!

அந்நாளில் என் படைப்புகளின் முதல் ரசிகை என் தங்கை தான்! இன்றும் அவள் என் படைப்பு எது வந்தாலும் அதை தன் ஸ்டேட்டஸில் வைத்து விடுவாள்! என் திருமணத்திற்குப் பின், நான் எழுதுவதற்கு எல்லா வகையிலும் உறுதுணையாக நிற்பவள் என் இல்லத்தரசிதான்... மனைவியாக மட்டுமல்ல; என் தோழியாகவும் என் படைப்புகளின் ரசிகையா கவும் இருப்பவள். என் எழுத்துக்களைப் பாராட்ட பலர் இருந்தாலும், அவளின் ஒத்துழைப்பும் உதவியும் இன்றி, எழுதுவது என்பதே சவாலான காரியம்தான்..!

ஆம்! நான் அதிக கவிதைகளைப் பெற்றெடுத்ததும்கூட கல்யாணத்திற்குப் பிறகுதான் என்பதே இதற்கு ஆகப்பெரும் சாட்சி!

பின்னாட்களில் என் நண்பனின் காதலுக்கும் கவிதை எழுதியிருக்கிறேன். அவற்றில் ஒன்று, 'இன்று' ஈ இதழில்கூட பிரசுரமாகியிருக்கிறது. 'மனமிரங்க மறுக்கும் பெண்ணே...'

எனத் தொடங்கும் அப்பாடலுக்கு Suno செயலி மூலம் இசை சேர்த்து பாட்டாகவும் மாற்றியிருக்கிறேன்.

எங்கள் ஊர் கோயில் திருவிழாக்களையொட்டி மேடையில் கவிதை வாசித்து மகிழ்ந்த இனிய தருணங்களும் உண்டு!

இடையில் அவ்வப்போது, எனக்கும் எழுத்தில் தொய்வு ஏற்பட்டதுண்டு. முகநூல் மூலம் தஞ்சை ப்ரணா சார் அவர்களுடன் நட்பு ஏற்பட்டது. அவர் மூலமாக தமிழக எழுத்தாளர்கள் குழுமத்தில் இணைந்தேன். அதை இன்றளவும் பெரிய வரமாகக் கருதுகிறேன்! அதன் பிறகுதான் எழுத்தில் எனக்கு மிகப்பெரிய ஊக்கம் ஏற்பட்டது. முன்னிலும் பன்மடங்கு வேகம் கூடியது எழுத்தில்!

இதழ்களில் பார்த்து வியந்த பெரும் எழுத்தாளர்களுடன் எல்லாம் இணைய வழியிலும் நேரிலும் அளவளாவும் பாக்கியம் கிடைத்தது!

மறைந்த எழுத்தாளர் திரு. பூங்கதிர் அவர்களின் கதிர்ஸ் இதழ்தான், புகைப்படத்துக்கும்

ஓவியத்துக்கும் கவிதையெழுத எனக்குப் பயிற்சியளித்தது. நான் செக்யூரிட்டியாகப் பணிபுரிந்தாலும், பல்வேறு துறைகளிலும் உயர்நிலையில் இருப்பவர்களுடனும், மிகப்பெரிய எழுத்தாளுமைகளுடனும் என்னை இணைத்திருக்கும் புள்ளி எதுவென்றால், அது எழுத்தொன்றே!

என்னால் மறக்க முடியாத சில பாராட்டுகளை, நன்றியுணர்வுடன் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்...

ஆயிரம் பாராட்டுக்கள் கிடைத்தாலும், 'நான் உங்கள் எழுத்துக்கு ரசிகன்' என்று ஒருவர் தன்னை அடையாளப்படுத்திக் கொள்வதைவிட மிகுந்த சந்தோஷமும் பெரும் பேறும் எது இருக்க முடியும்..!

அந்த வகையில், எனக்குச் சீனியராகவும் என்னைவிடச் சிறப்பாக எழுதுபவராகவும் இருந்தபோதிலும், அடிக்கடி என் எழுத்துக்களைச் சிலாகித்தும் என்னை ஊக்குவித்தும், நெகிழவும் நெக்குருகவும் வைத்ததில் முதலிடத்தில் இருப்பவர் ந.விஜய் ஆனந்த் சார்தான்!

தமிழக எழுத்தாளர்கள் குழுமத்தில் நான் இணைந்த புதிதில், தினமும் தவறாமல் என்னை அழைத்துப் பேசும் சரஸ்வதி செந்தில் சார்.., 20 ஜோக்ஸ்களைக் கூட நான் தாண்டாத நிலையில் இருந்தபோதே, 'உங்கள் ஜோக்ஸ்களை நான் கவனித்திருக்கிறேன்; குறைவாக எழுதியிருந்தாலும் சிறப்பாக இருக்கும்' என்று பாராட்டி ஊக்குவித்தவரும், 'காதல் கவிதைகள் எழுதுவது என்றால் அவருக்கு அல்வா சாப்பிடுவது மாதிரி' என்று என்னைப் பாராட்டியவருமான ராம் ஆதிநாராயணன் சார்.., பத்திரிகையில் என் கவிதைகள் வரும்போதெல்லாம், என் தனிப் புலனத்துக்கு வந்து, காதல் கவியரசர் என்று கொஞ்சும் முத்து ஆனந்த் சார், ஒரு புகைப்படத்திற்கு நான் எழுதிய கவிதையை அவரது ப்ரொபைல் பிக்சர் ஆகவே சில நாட்கள் வைத்திருந்தார்.., விகடனில் தொடர்ந்து ஒன்பது வாரங்கள் என் ஜோக்ஸ் பிரசுரமானபோது, 'கிங் ஆப் ஜோக்ஸ்' என்று பாராட்டியதுடன், 500 ரூபாய் சன்மானமும் அனுப்பி வைத்து கௌரவித்த ரிஷிவந்தியா சார்.., 'நாலுகால் பாய்ச்சலில் வருபவர்' என்று பாராட்டிய கயத்தை சத்யா சார்..,

'இளம் மூளை... ஷார்ப்பாக இருக்கிறது!' எனப் பாராட்டிய வளர்மதி ஆசைத்தம்பி சார்,

உங்கள் கவிதைகளில் ஒரு தனித்துவம் இருக்கிறது எனப் பாராட்டிய திருப்பூர் மகா சார், வாட்ஸ் அப் குரூப்பில் ஒரு புகைப்படத்துக்கு நான் எழுதியிருந்த 'கம்மலுக்குச் செவி கொடுத்தவளே... என் விம்மலுக்கு செவிகொடுக்க மாட்டாயா!' என்ற கவிதையைப் பார்த்ததும், உடனே அலைபேசியில் அழைத்து என்னை வெகுவாய்ப் பாராட்டிய கடல் நாகராஜன் சார்,

என் ஒவ்வொரு ஸ்டேட்டஸையும் பாராட்டிப் பதிவிடும் ப.சோமசுந்தரம் சார், புதூர் பாலா சார், சி.பி செந்தில்குமார் சார், கல்லூரி ராமன் சார், மு.மோகன் சார், எஸ். வைத்தியநாதன் சார், அருப்புக்கோட்டை செல்வம் சார், ஜெரி.டி டார்வி சார், திருமாளம் பழனிவேல் சார், முகமது நிஜாமுதீன் சார், சகோதரி கி.சரஸ்வதி, சகோதரி பாரதிமுத்து, சங்கர்ஜி சார், ராம் மோகன் தங்கசாமி சார், இரா கமலக்கண்ணன் சார், திருப்பூர் சாரதி சார், என இன்னும் பலரைச் சொல்லலாம்!

இதுவரை நான் எழுதிய பத்திரிகைகள்:

தினத்தந்தி – குடும்பமலர், தினமலர் – வாரமலர், சிறுவர் மலர், ராணிமுத்து, ராணி, ஆனந்த விகடன், குமுதம், முத்தாரம், கதிர்ஸ், கவிமாடம், அனிச்சம், பொதிகைச் சாரல், நம் உரத்த சிந்தனை, காமதேனு, ஜூனியர் விகடன், இன்று, மணிமகுடம், விதுரன், தமிழ்நாடு இ பேப்பர்,

நம் தோழி, குமுதம் – சிநேகிதி, இந்து தமிழ் திசை, தங்க மங்கை, தினமணி – கதிர், தேன்சிட்டு, ஆதிரை ஆகியவை!

தற்போது நான் ஒரு ஜோக் புத்தகம் வெளியிடுவதற்கான ஆயத்தப் பணியில் இருக்கிறேன். அதைத்தொடர்ந்து கூடிய விரைவில் ஒரு கவிதைத் தொகுப்பும் வெளியிட ஆவலாய் இருக்கிறேன். மேலும் யூடியூப் சேனல் தொடங்கி, அதில் பாடல்கள் வெளியிடுவதற்கும் தயாராகி வருகிறேன்!

சன்மானத்தைவிடவும் ஆத்ம திருப்திக்காய் எழுதுவதைத்தான், இப்போது நான் அதிகம் விரும்புகிறேன்; அது ஒரு பரம சுகம்! எழுத்தில் கவனம் செலுத்துவதைப் போலவே, உடல் நலத்திலும் கவனம் செலுத்தும்படி இந்த சிறப்பிதழ் வாயிலாக சக எழுத்தாளர்களைக் கேட்டுக்கொள்கிறேன்! எழுத்துக்காக மட்டுமல்ல; எதற்காகவும் உடல் நலம் கெட்டுப்போக நாம் அனுமதித்துவிட வேண்டாம் என்பது, என் அன்பான வேண்டுகோள்!

இந்த இதழில் என்னைச் சிறப்பாசிரியராக நியமித்து பெருமைப்படுத்திய, இன்று ஈ இதழ் ஆசிரியர் குழுமத்திற்கு எனது இதயம் கனிந்த நன்றிகளைச் சமர்ப்பிக்கிறேன்!

முகவரி:

சு. அருண் பிரகாஷ்,
4/106, மெயின் ரோடு, தங்கம்மாள்புரம்,
சேர்வைக்காரன் மடம் அஞ்சல்,
தூத்துக்குடி மாவட்டம்,
பின்கோடு: 628103

மொபைல்: 8526037792

காதல் செவ்வகம்

அளவியல் என்றால்
நினைவுக்கு வருகிறது
நீள அகலங்கள் கொண்ட
கணிதச் செவ்வகம்!

உளவியல் என்றதும்
என் நினைவுக்கு வருவது
ஆழ அகலங்கள் கொண்ட
உன் காதல் செவ்வகம்!


சு. அருண் பிரகாஷ்
இராமச்சந்திரபுரம்

உதட்டளவு முத்தம்

********** **********

உள்ளத்தின் அடியாழத்திலிருந்து
நீ கொடுத்த முத்தத்தை
உதட்டளவில் கொடுத்த முத்தமென்று
எவர் சொல்லிவிட முடியும்...
என் கன்னத்தில் பதிந்திருக்கும் உன்
லிப்ஸ்டிக் கறையைப் பார்த்துவிட்டு!

சு. அருண் பிரகாஷ்
இராமச்சந்திரபுரம்







சேகரித்தல்

புன்னகையைச் சிந்திவிட்டுத்
தூங்கப் போய்விடுகிறாய் நீ...
இரவெல்லாம் விழித்திருந்து
சேகரித்துக் கொண்டிருக்கிறேன் நான்!

சு.அருண்பிரகாஷ்





சு.அருண் பிரகாஷ்

எதிரிக்கு மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை மூன்றுமே கிடையாதென்றால், எதற்காக என்மீது படையெடுத்து வருகிறான் அமைச்சரே?"

"தங்கள் முதுகைப் 'புண்' ஆக்கிப் பார்க்க வேண்டுமென்று பொல்லாத ஆசைதான் காரணமாம் மன்னா!"



"பாதயாத்திரை போறதுல கின்னஸ் சாதனையே பண்ணிட்டாரா தலைவர்...

ஏன், இதுவரை யாரும் அவ்வளவு தூரம் நடந்ததே இல்லையா?"

"ம்ஹூம்... இவர் அளவுக்கு யாரும் இத்தனை முறை ஒத்தி வச்சதே இல்லையாம்!"



"நீங்க புலவர் பரம்பரையா... அதை ஏன், என்கிட்ட வந்து சொல்றீங்க?"

"நீங்க மன்னர் பரம்பரைன்னு சொன்னீங்களே... அதான், பாடி பரிசு பெறலாம்னு வந்தேன்!"

"முடியாது என்பது முட்டாள்களின் அகராதியில் உள்ள சொல்னு தலைவரிடம் சொன்னது தப்பாப் போச்சா... ஏன்?"

"அறிவாளிகள் எல்லாம், அந்தப் பக்கத்தைக் கிழிச்சு எடுத்துடுவாங்களான்னு கேட்கிறாரே!"



"மன்னருக்கு ஏன் தளபதி மீது இத்தனை கடுப்பு?"

"இவர், போருக்குப் போயிட்டு முதுகு வலியோடு வர்றார்... அவரோ, போருக்குக் கிளம்பும் முன்பே நெஞ்சுவலின்னு படுத்து விடுகிறாராம்!"



"தலைவர் அநியாயத்துக்கு வெள்ளந்தியா இருக்கார்னு எப்படி சொல்ற?"

"குட்கா உபயோகிக்கிறது கேடுங்கிறாங்களே... 'குட்'னா, நல்லதுன்னுதானே அர்த்தம்னு கேட்கிறாரே!"

அருண் கவிதைகள்

பல்புகள்

மின்சாரம் இல்லாமல்
ஒளிர்கின்ற பல்புகள்...
உன் பற்கள்!

விரியும்
அழகு தோகையுடன்
சேர்ந்தே விரிகிறது
மயிலின் அழகும்!

கனக்கட்டும் என் இதயம்...
உன் பிரிவால் அல்ல
பிரியத்தால்!

குடை

மடக்க முடியாத குடை
காளான்!

கவிழ்த்தல்

கவிழ்க்காமல் கவிழ்த்தது
நீரைப் பொழியாமல்
கடந்து சென்ற கார்மேகம்!

சிந்தும் புன்னகையில்
நீ
சிந்தாமல் சிந்துகிறாய்
புன்னகையை...
அள்ளாமல் அள்ளுகிறாய்
பல இதயங்களை!

நீலம் பாரித்த கடல்
பாற்கடலே...
உன் நஞ்சு முழுவதையும்
பரமன் எடுத்து உண்ட
பிறகும்
இன்னும் ஏன்
நீலம் பாரித்தே கிடக்கிறது
உன் உடல்!

பூவாளி
தொட்டிச் செடிகளுக்கு
மட்டுமல்ல;
மிகப்பெரிய
விருட்சங்களுக்கும் கூட
பூவாளியில்தான்
நீரூற்றுகிறது வானம்...
மழை!

நடந்து வரும் நாற்று

நெல் நாற்றுகளுக்கு
மத்தியில்

உன் நினைவலைகள்

கடலலையில் நீ
கால் நனைத்ததிலிருந்தே
எப்போதும் உன்
நினைவலைகள்தான்
அந்த நீரலைகளுக்கு!

நன்கொடை
****
வையத்தின் ஆகச்சிறந்த
நன்கொடை...
வான்கொடை!

மிச்சம்
நீர் எதிரியென்றாலும்
அதற்கெனவும் கொஞ்சம்
மிச்சம் வைத்தது
நெருப்பு...
அஸ்தி!

அழகாய் மாறலாம்

புழுவென
அற்பமாய்ப் பார்க்காதே...
காலம் வருகையில்
பட்டாம்பூச்சி போல்
அழகாய் மாறலாம்
எவரது வாழ்க்கையும்!

6 எனது ஆறாம் வகுப்பு


இன்று மின்னிதழ்

நீங்கள் படித்த பள்ளி,
உங்கள் ஆசிரியர்,
உங்கள் நண்பர் பற்றி
கட்டுரை எழுதுங்கள்
14.08.2026 க்குள் அனுப்பவும்

7094053241 indhrumail@gmail.com

அவசர தொலைப்பேசி எண்கள்


Helpline Number	Department
100	Police
101	Fire
102	Ambulance
103	Traffic Police
104	State level Helpline for Health
108	Disaster Management / Medical Helpline
112	All in One Emergency Number (General Emergency Department of Telecommunications (DoT))
131	Indian Railway General Enquiry
139	Railway Enquiry
181	Domestic abuse and sexual violence-Women's Helpline
197	Directory Enquiry Service
198	Telephone Complaint Booking
1031	Anti Corruption Helpline
1033	Emergency Relief Centre on National Highways
1066	Anti-poison
1071	Air Accident
1072	Train Accident
1073	Road Accident / Traffic Helpline
1090	Anti terror Helpline / Alert All India
1091	Women Helpline in Distress
1092	Earth-quake Helpline Service
1096	Natural Disaster Control Room
1097	AIDS Helpline
1098	Child Abuse Hotline
1099	Central Accident and Trauma Services
1551	Kisan Call Center
1906	LPG Emergency Helpline Number
1910	Blood Bank Information
1919	Eye Donation / Eye Bank Information Service
1947	Aadhar Card - UIDAI (Unique Identification Authority of India), 1800-180-1947
1950	Election Commission of India
1800-11-4000	National Consumer Helpline



அப்பா: காலாண்டு தேர்வு மார்க்கை விட அரையாண்டு தேர்வில் இங்கிலிஷ் பாடத்தில் கம்மியா மார்க் வாங்கியிருக்கிறாயே! ஏண்டா?
மகன் : எங்க ஸ்கூலுக்கு பக்கத்துல இருந்த டாஸ்மாக் கடையை மூடிட்டாங்களே!

அரசர் : எம்மை புகழ்ந்து பாடிய புலவருக்கு பொற்காசு வேண்டாமா? வேறு என்ன வேண்டுமாம்?
அமைச்சர் சோபா செட் வேண்டுமாம்!

நாஞ்சில் சு. நாகராஜன் பறக்கை.





மீனும்.... நானும்...

கொக்கின் கூரலகில்
சிக்கிய மீன்போல்
உந்தன் பேரழகில் நான்!

சு.அருண்பிரகாஷ்





முத்து ஆனந்த் – வேலூர்

பரிசு ரூ. 50

பழக்கம்

நேற்றையும் நாளையையும்
பார்க்கும் பழக்கம்
என்னுடைய இன்று–விற்கு உண்டு!

கொடி

உன்னைச் சந்தித்த அன்றிலிருந்தே
இன்று வரை கொடி கட்டிப் பறக்கிறது
என் காதல்!

விதை

இன்று தொடங்கும் திட்டமே
நாளைய வெற்றிக்கு
விதையாகிறது!

விருட்சம்

இன்று நீ
எனக்குள் விதைத்த அன்பு
காதல் விருட்சமாகிவிட்டது!

பார்வை

இன்று உன் மீது
விழுந்த என் பார்வை
சுற்றி வளைத்து விட்டது!

மிட்டாய்

இன்று நீ என்னை
முத்தமிட்டாய்!
உன் முத்தங்களே
இனி எனக்கு மிட்டாய்!

அதிசயம்

நேற்று வானொலி
இன்று காணொளி
அதிசயமான இயற்பியல்!

ஆட்டம்

இன்று நீ
ஆடாமல் தான் வந்தாய்!
என் மனம் ஆடிவிட்டது!

முயற்சி

தயக்கமின்றி
இன்று தொடங்கும் முயற்சியே
நாளைய வெற்றி!

புத்தகம்

இன்று முதல்
என்றும் நீயே
என் கவிதைப் புத்தகம்!

இன்று

காதலிக்கத் தொடங்கியதிலிருந்து
இன்று வரை என் இதயம்
பத்திரமாக இருக்கிறது அவளிடம்!

இன்று மின்னிதழின் சில அறிவிப்புகள் சேனலில் வெளியாகும். அந்த வரிசையில் இன்று என்ற வார்த்தை வருமாறு கவிதை எழுத வேண்டும் என்று அறிவிப்பு செய்திருந்தோம். அதன்படி திரு.முத்து ஆனந்த், திருமதி.கோவைக்கவி புவனா, திரு.வீரன்வயல் உதயகுமாரன் ஆகியோர் கவிதைகளை எழுதி அனுப்பினர். நீங்களும் நமது சேனலில் இணைய விரும்பினால் கீழே உள்ள படத்தை தொட்டு இணையவும்.

இன்று மின்னிதழ்
www.indhru.in

"முதலாம் ஆண்டு"

வாங்கம்மா. வாடா நண்பா. அப்பா வரலையா?
அப்பா அவசரமா வெளியே போயிருக்கார். நானும் அம்மாவும் நேர்ல வந்தோம். என்னோட திருமண பத்திரிக்கை தரதுக்கு.

ரொம்ப சந்தோஷம். பொண்ணு சொந்தமா, இல்ல அந்நியமா?



தூரத்து சொந்தம். அப்பாவோட சொந்தம்.

அப்படியா... ரொம்ப சந்தோஷம். எப்போ கல்யாணம்?

அடுத்த மாசம் அஞ்சாம் தேதி. குடும்பத்தோட அவசியம் வரணும்.

கல்யாணத்துக்கு மறுநாள் குடும்பத்தோட வர்றோம்டா. ஆனா கல்யாண அன்னைக்கு எங்களால வர முடியாது.

ஏன்டா?

இருண்டு போன என் வாழ்கைக்கு வெளிச்சம் கிடைச்ச நாள் அது. எனக்கு மட்டுமில்ல, இன்னும் சிலரோட வாழ்கைக்கும் வெளிச்சம் கிடைச்ச நாள்.

எனக்கு புரியல. விளக்கமா சொல்லுடா.

* பிறந்தநாளை கொண்டாட ஒரு நண்பர். அவர் நண்பரை பார்க்க சென்றுள்ளார். அன்னைக்கு அவர் ஒரு விபத்துல உடனே உயிரிழந்துட்டார்.*


அந்த குடும்பம் துக்கத்துலயும் அவரோட உடல் உறுப்புகளை மருத்துவமனைக்கு தானம் கொடுத்தாங்க. அந்த தானத்துல கிடைச்ச ஒரு கண்ணைதான் நான் இன்னைக்கு பெற்று, உங்க எல்லாரையும் பாக்கிறேன்.

அதனாலதான் அவங்க வீட்டுக்கு நாங்க குடும்பமா போறோம். அது அவரோட முதலாம் ஆண்டு நினைவஞ்சலி.

ரொம்ப பெருமையா இருக்குடா.

இறந்த உடம்பு மண்ணோடு மண்ணா போறத விட, அந்த உடம்புல இருக்கிற சில உறுப்புகளை தானம் கொடுத்து இன்னொரு உயிரை வாழ வைக்கிறது தான் உண்மையான சிறப்புனு உன்ன பாத்து தெரிஞ்சுகிட்டேன்.

திருச்சிற்றம்பலம் சுரேஷ்
✆ 9092142678



ஒற்றைச் சொல்

வாசலில் மாக்கோலம்
கொல்லையில் மாரியின்
நீர்க்கோலம்
அம்மாவின் அரவணைப்பு
அப்பாவின் கொஞ்சல்
அண்ணனின் நேசம்
வானில் மின்னும் நட்சத்திரம்
கண்ணாமூச்சி ஆடும் நிலவு
மழலையின் குமிழ் சிரிப்பு
இவை யாவும் அடங்கும்
ஒற்றைச் சொல்
" ஆஹா " !

பி. ஆர்.கிரிஜா





இன்று

இருவர் நேசமும்
சுவாசமும் கலந்து
இதயத்தைப் புதுப்பிப்போம்
இன்றே வா!!!!

கோவைக்கவி புவனா



–நௌஷாத் கான் .லி –

மீன் பிடிக்க
நரபலி கொடுக்கப்பட்டது
மண் புழு ...

வெறுமையாய் காதல் எங்கிருக்கிறது
என்கிறாய்??
பெருமையாய்
உன் கண்களை மட்டுமே பார்க்கிறேன்!

ஏவாளின் கடைசி மகளே
காதலின் பிறப்பிடம்
உன் கண்கள் தான்!


கழுத்துக்கு கீழெல்லாம் காமமென்றால்
கண்ணோடு கண்ணாக
காதல் செய்வோம் வா!

அப்படியெல்லாம் பார்க்காதே
ஆறடி உயரமும்
ஆடி போகிறது!

முகமூடி அணியாத
மனிதனை
இப்பிரபஞ்சத்தில் காண்பது அரிது!

நரை எழுதும் சுய சரிதையில் கூட
அவன் சுயம் தெரியாது.
மனிதன்
ஒரு போதும் கடவுளாக மாட்டான்
மனிதன்
மகத்தான சல்லிப்பயல் தான்!

எந்த நீதிபதியும்
அடுத்தவரின்
நியாயப் பக்கங்களை
புரட்டி பார்ப்பதே இல்லை?
விதி எழுதும்
கடவுளை போல!





ஹைக்கூ கவிதைகள்

துயரங்களை தூளி கட்டி
ஆட்டுகிறான் மனிதன்
தன் அறியாமையால்
வானம் இடித்தது
பிரபஞ்சத்துக்கு
விக்கலா?
நீ பார்த்ததும்
எனக்குள்
பௌதீக மாற்றமடி
என் அணுவைப் பிளந்து
காதல் அண்டம்
சமைத்தாய் நீயடி
கடனை அடைத்த சந்தோஷம்
சாமான்யனுக்கு தன்
பசு கன்று ஈன்றதால்

ஏ. மூர்த்தி
புல்லரம்பாக்கம்

ஜோக்ஸ்

"உங்களை அஞ்சு மணிக்கு கடத்த போறதா தகவல் சொன்னவங்க சரியான நேரத்துக்கு வந்துட்டாங்களே !' போலீஸ்க்கு தகவல் சொல்லியும் ஏன் வரலை !"

"வண்டியில பெட்ரோல் இல்லையாம் வரதுக்கு கொஞ்ச நேரம் ஆகுமாம், கடத்தல்காரங்களை கொஞ்சம் வெயிட் பண்ண சொல்றாங்க !"

எம்.பி.தினேஷ்.
கோவை – 25



உண்மை என்ன?

சுதந்திரம் புரிந்தோமா –அது
பயணித்து வந்த
பாதை அறிவோமா...

எழுச்சிமிகு தலைவர்கள்
உணர்வுமிகு கவிஞர்கள்
அறவழி நின்று
அடக்குமுறைகளை எதிர்கொண்டு
ஆயுதங்கள் மறுத்து
அகிம்சை வழிமுறை
மறவாது கைக்கொண்டு
உறக்கம் மறந்து
உண்ணாமல் துயர்கொண்டு
அடைந்த சுதந்திரம்

அதன் மகிமை
உன்னதம் புரியாது
சுதந்திர தினத்தை
நமக்கு கிடைத்த
விடுமுறை தினமாகக்
கொண்டாடி மகிழ்கிறோம்
உண்மை புரியாது
அர்த்தம் கொள்கிறோம்.



கா. ஹபீப் முகமது.

நான் தற்பொழுது
கவிதை எழுதுவதில்லை.
ஏன் எழுதவில்லை
என்று யாரும் கேட்கவில்லை.

அதனால்
நான் கவிதை எழுதுவதில்லை.

கவிதை எழுதாதவர்களை
ஏன் எழுதவில்லை
என்று கேளுங்கள்.

சிலர் இன்னும் எழுதுகிறார்கள்

அவர்களிடம் நீங்கள்
ஏன் எழுதுகிறீர்கள்
என்று கேளுங்கள்.



–வளவ.துரையன்,

✆ 93676 31228



சு.அருண் பிரகாஷ்
சிறப்பிதழ்

இன்று தள்ளிப்போடும்
எந்தச் செயலுமே
என்றும் தள்ளிப் போகும்...

வீரன்வயல்
வீ.உதயக்குமாரன்
திருவாரூர்

பரிசு
ரூ.
50


வேலைகளை
தள்ளிப்போடாதீர்கள்
அன்றே
செய்யுங்கள்
@ indhru.in
இன்று
மின்னிதழ்
www.indhru.in
7094053241
indhrumail@gmail.com


சிறுவயது
காலம்
திரும்ப வராது
@ indhru.in


சாலையில்
பயணம்
கவனம்
@ indhru.in


காலத்தை நன்கு
திட்டமிட்டால் நம்மை,
கதாநாயகனாக்கும்.!
இன்று
மின்னிதழ்
www.indhru.in
7094053241
indhrumail@gmail.com


6
எனது
ஆறாம்
வகுப்பு
இன்று
மின்னிதழ்
நீங்கள் படித்த பள்ளி,
உங்கள் ஆசிரியர்,
உங்கள் நண்பர் பற்றி
கட்டுரை எழுதுங்கள்
14.08.2026 க்குள் அனுப்பவும்
7094053241
indhrumail@gmail.com


முதல் முறை தான்
ஆச்சர்யம்...
அடுத்தடுத்தது
செயல் தான்..
www.indhru.in


காலப் போக்கில்
எல்லாம்
சரியாகிவிடும்...


என்னதான் நேரமே இல்லைன்னாலும்
ஆபீஸ்ல வந்து தான் ஷேவ்
பண்ணணுமா ?
இதெல்லாம் டூ மச் !
எம் அசோக்ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி
செல் -9750 333 265



சு.அருண் பிரகாஷ்
சிறப்பிதழ்










கோயமுத்தூர் புத்தக கண்காட்சி 2026ல் புஸ்தகா ஸ்டாலில் கல்லூரி மாணவிகள் "முகில் தினகரன்" புத்தகங்களை தேர்ந்தெடுத்த பொழுது...













சு.அருண் பிரகாஷ்
சிறப்பிதழ்



காதல் பாரி, காதல் வெள்ளி கவிதைகள் மன்னன்,

வேலூர் முத்து ஆனந்த்

அவர்களுக்கு

இனியபிறந்த நாள் வாழ்த்துக்கள்

(ஆகஸ்ட் 11)

பணிவிடை

==========

,குடும்பத்தினரின் ஏடிஎம் அட்டை ஆதார் அட்டை போன்ற முக்கியமான ஆவணங்களை நான்எடுத்துச் செல்லும் அந்தப் பையை இன்று காலையில் அவசரமாக எடுத்துக் கொண்டு, மளிகைக்கடை காய்கறி கடை மருந்து கடை என்று கையில் பிடித்துக் கொண்டே கடைகடையாய் ஓடித்திரிந்திருக்கிறேன். வண்டியில் வீட்டுக்குத் திரும்பும் போதுதான், அந்தப்பை "அடிப்பகுதியில் தையல் பிரிந்திருக்கிறது எடுத்து கொண்டு போகாதீர்கள்" என்று என் மனைவி நேற்றிரவு எச்சரித்தது நினைவில் வந்து சுரீர் என நெஞ்சை சுட்டது.
ஐயோ கடவுளே... கிழிசல் வழியாக அட்டைகள் ஏதும் நழுவி விழுத்திருக்குமோ! உடனே பையை எடுத்துப் பார்க்கவும் முடியாமல் வாகன நெரிசல். ஒவ்வொரு அடியாக வண்டியை நகர்த்தி அரை கிலோ மீட்டர் தாண்டி வருவதற்குள் மனம் குழம்பிப் பரிதவித்துத் தான் போனேன். இதயம் படபடவென அடித்துக் கொண்டது. தடா புடா வென்று வண்டியை ஓர் ஓரமாய் நிறுத்தி விட்டு பையை எடுத்துத் திறந்தேன். எல்லாம் பத்திரமாகவே இருந்தன. பையை திருப்பிப் பார்த்தேன். கிழிசல் இருந்த இடம் கையால் அழாகாக தைக்கப்பட்டிருந்தது.

"எழுதும் போது எழுதுகோல் மறைந்து விடும்" என்கிறார் வள்ளுவர்...!

பணிவிடையில் மனைவியும் மறைந்து கொள்கிறாரோ....

சுய நினைவு வரும் அங்கேயே . உறைந்து போய்நின்றேன்.. "இல்லாள் அகத்திருக்க இல்லாததொன்றுமில்லை." ஔவையே நீர் வாழ்க!!

குடந்தை பரிபூரணன்.






தடம்

இன்று மாபெரும் பிரபஞ்சத்தில்,
ஒளிர்ந்தெழும் சூரியனுக்கு,
ஒளியென விரிந்த வானுக்கு,
ஒளி உண்டு சுடரும் மண்ணுக்கு,
ஒளிசொட்டும் நீருக்கு
ஒளி ஊற்றும் காற்றுக்கு
ஒரு பொருட்டே அல்ல தடங்கல்.
பூமியெங்கும் நடந்து செல்லும்
எத்தனையோ கால்களுக்கும்
காலடித்தடங்களுக்கும்
புலப்படுவதே இல்லை
எனினும் வான்கீழ்,
வாழும் மண்ணில்
தன்னின்று ஓர் ஒளிக் கோலமாக
அடையாளம் வரைந்து
தடத்தை விட்டுச் செல்வது அற்புதமானது!
ஒரு தடத்தை விட்டுச் செல்லும் பாக்கியம்
மனிதனுக்கே வாய்த்த மகத்துவம் !

ஸ்ரீநிவாஸ் பிரபு





கதைகளில், கவிதைகளில் வரும் பெயர்கள் சம்பவங்கள் அனைத்தும் கற்பனையே... யாரையும் எதையும் குறிப்பிடுவன அல்ல. படைப்புகள் கொடுத்த வலைதளங்களுக்கு நன்றி.

அழகிய ஆரம்பம் இன்று மின்னிதழ் வெளியிடுபவர்

ஆசிரியர் திரு.வெ.கோபிநாத் இன்று மின்னிதழ் - 29 சக்தி நகர், ஆதம்பாக்கம், சென்னை செல் : 7094053241

